# இன்னோ குழுமத்தின் நகரமயமாக்கல் திட்டம்



அய்ரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் இந்தியாவில் ரியல் எஸ்டேட் துறையில் தொழில் கவனம் செலுத்தி வரும் உலகளாவிய முதலீட்டு நிறுவனமான இன்னோ குழுமம், சென்னையில் இன்னோ பி.ஓய்.சி. என்ற உங்கள் நகரை உருவாக்குங்கள் என்ற புதிய முயற்சியை தொடங்கியிருப்பதாக அறிவித்துள்ளது. இன்னோ பி.ஓய்.சி. என்பது பொதுமக்கள் பங்கேற்கும் ஒரு பொது மேடையாகும். இதற்கான வெப்சைட், லோகோ ஆகியவற்றை இக்குழுமத்தின் நிருவாக இயக்குநர் ராஜமன்னார் ராமசாமி சென்னையில் 27.3.2012 அன்று மாலை நடைபெற்ற விழாவில் அறிமுகப்படுத்தி வைத்தார்.

சென்னையை சிறந்த நகரமயமாக்க ஆலோசனைகள், கருத்துகளின் களஞ்சியமாக இந்த அமைப்பு செயல்படும். இங்கு கிடைக்கும் ஒரு சில யோசனைகள் பொது மக்களின் தீராத பிரச்சினைகளுக்கும் சிறந்த தீர்வாக அமையும் என்று அவர் தெரிவித்துள்ளார்.